**கூடுதல் சார்பு நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**

**வாக்குமூல படிவம்**

Dt: 09.03.2026 **OS. 60/2021**

**வா.சா.3 சரவணன்**

**குறுக்கு விசாரணை**

எனக்கு 35 வயது ஆகிறது. நான் விவாசத் தொழில் செய்து வருகிறேன். வாதி எனக்கு தெரிந்தவர் ஆவார். குணசேகரனை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் நல்லதங்காளுக்கு கடன் கொடுத்த சமயத்தில் இருந்துதான் தெரியும். கடன் பரிவரித்தனை ஏற்பட்டு சுமார் 7, 8 வருடங்கள் ஆகிவிட்டது. நல்லதங்காளின் கடைக்கு நான் போக வர இருந்ததால் அவரை பற்றி எனக்கு தெரியும். சின்னசேலம் வள்ளலார் மடம் அருகில் உள்ள நல்லதங்காள் கடைக்கு நான் போக வர இருந்தால் எனக்கு நல்லதங்காள் பழக்கம் ஆவார். சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பாக இறுதியாக நல்லதங்காள் கடைக்கு போனேன். நல்லதங்காள் அம்மாவை பார்த்து சுமார் 5,6 வருடங்கள் இருக்கும். நல்லதங்காள் தற்சமயம் உயிருடன் இல்லை. நல்லதங்காள் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. நல்லதங்காளின் கொடுக்க வாங்கல் விவரம் எனக்கு தெரியாது, யார் யாருக்கு பணம் கொடுத்து வாங்கினார் என்ற விவரம் தெரியாது. நல்ல தங்காள் சொத்து விவரம் எனக்கு தெரியாது. வாதி குணசேகரன் இதுவரை 2,3 முறை சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தார். கடனுறுதி சீட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்து உள்ளதால் சாட்சியம் அளிக்க என்னை அழைத்தார். பத்திர எழுத்தர் முருகேசன் அலுவலகத்தில் வைத்து நான் சாட்சி கையொப்பம் செய்தேன். முருகேசன் எங்கு அலுவலகம் வைத்து இருந்தார் என்றால் சின்னசேலம் காந்தி நகர் போகும் வழியில் உள்ள போயர் தெருவில் அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகம் அருகில் முருகேசனுக்கு ஆவண எழுத்தர் அலுவலகம் உள்ளது. அங்கு உள்ள முருகேசன் அலுவலகம் சென்றுதான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

என்னுடன் ராஜா என்பரும் போயர் தெருவில் உள்ள முருகேசனின் அலுவலகத்தில் வைத்துதான் சாட்சி கையொப்பம் செய்தார். பணம் கொடுத்த குணசேகரன், நல்லதங்காள், ஆவண எழுத்தர் முருகேசன், சாட்சி ராஜா மற்றும் நான் ஆகிய ஐவர் தான் போயர் தெருவில் உள்ள முருகேசன் அலுவலத்தில் இருந்தோம். என் சிறுவயதில் இருந்து சின்னசேலத்தில்தான் உள்ளேன். கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு முன்பாக பதிவாளர் அலுவலகத்திற்கு வேறு எந்த பரிவர்தனைக்கும் நான் சென்றது இல்லை. தற்சமயம் செயல்படும் இடத்திற்கு முன்பாக பதிவாளர் அலுவலகமானது சின்னசேலம் திரு.வி.க நகர் சந்தை மேட்டிற்கு அருகில் இருந்தது என்றால் சரிதான். சந்தைமேட்டில் இருந்து எப்பொழுது தற்சமயம் உள்ள இடத்திற்கு பதிவாளர் அலுவலகம் வந்தது என்று எனக்கு தெரியாது. போயர் தெருவில் உள்ள முருகேசனின் அலுவலகத்தில்தான் நானும் மற்றவர்களும் கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்தோம். நல்லதங்காளுக்கு எதற்காக ரூ.2,50,000/- பணம் தேவைப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வீடு அடமானத்தில் இருப்பதால் அதை மீட்பதற்கு பணம் தேவைப்படுவதாகவும், அதற்கு என்னை சாட்சி கையொப்பம் செய்யுமாறு கேட்டார். நல்லதங்காள் அடமானம் வைத்து எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நல்லதங்காள் சொத்தை அபகறிப்பதற்காக வாதி குணசேகரன் சாட்சி ராஜா, நான் ஆகியோர் கூட்டு சதி செய்து இவ்வழக்கு தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கடனுறுதி ஆவணம் ஜோடிக்கப்பட்டது என்பதால்தான் மேற்படி ஆவணம் ஏற்பட்டது குறித்து முரண்பட்ட சங்கதிகளை சாட்சியமாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கடனுறுதி சீட்டின் பேரில் நல்லதங்காள் எந்த தொகையும் தரவில்லை என்றால் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டு மறுபயன் அற்றது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.